**ஜூன் – 06**

# TNPSC துளிகள்

- ❖ உலகின் மிகவும் சக்தி வாய்ந்த சரக்கு இரயில் என்ஜின்களில் ஒன்றான, இந்தியாவின் முதல் D9 - 9000 HP மின்சார இரயில் என்ஜினைப் பிரதமர் குஜராத்தின் டஹோட் என்ற இடத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தியத் தர நிர்ணயச் சபையின் (QCI) புதிய ஒருங்கிணைந்த தலைமையகம் ஆனது புது டெல்லியில் உள்ள உலக வர்த்தக மையத்தில் திறக்கப்பட்டது.
- ❖ இந்திய இராணுவம் ஆனது, 'சத்பாவனா நடவடிக்கை'யின் ('Operation Sadbhavana) கீழ் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பித்தோராகர் என்னுமிடத்தில் 'பஞ்ச்ஷூல் பல்ஸ்' எனப் படும் தனது முதல் FM வானொலி நிலையத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்தியா-மங்கோலியா ஆகியவற்றுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான 17வது நொமாடிக் எலிபாண்ட் (Nomadic Elephant) பயிற்சியானது மங்கோலிய நாட்டில் உலான்பாதரில் நடத்தப்பட உள்ளது.
- ❖ சத்தீஸ்கரின் நவா ராய்ப்பூரில் இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை (SEZ) நிறுவ உள்ளது.
- ❖ இந்தியாவின் அகமதாபாத் நகரத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான ஆசியப் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.
- ❖ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இந்திய மொழிகளுக்கான 'பாரத் ஜென்' (BharatGen) எனப்படும் இந்தியாவின் முதல் வகையான பல் நோக்குப் பெரிய மொழி மாதிரி (LLM) ஆனது, "பாரத் ஜென் உச்சி மாநாட்டில்" என்ற அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ கருக்கலைப்பு மாத்திரையை உருவாக்கிய பிரான்சு நாட்டின் அறிவியல் ஆய்வாளர் எட்டியென்-எமிலி பௌலியூ சமீபத்தில் காலமானார்.
- ❖ மனிதரல்லாத விலங்குகளில் அவற்றின் இனத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டும் தற்சிறப்பினத் தன்மையினைக் கண்டனம் செய்யும் வகையில் ஜூன் 05 ஆம் தேதி உலகத் தற்சிறப்பினத் தன்மை (Speciesism) எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சதுப்புநிலத் தோட்டங்கள்




- ❖ மாநில வனத்துறையானது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இரண்டு கடலோரக் கிராமங்களில் சதுப்புநிலத் தோட்டங்களை நிறுவச் செய்யும் ஒரு நடவடிக்கையினை

மேற்கொண்டு ள்ளது.

❖ இயற்கைப் பேரிடர்களிலிருந்து கிராமங்களைப் பாதுகாக்க உயிரிக் கட்டமைப்பு சார் கவசங்களை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2024-25 ஆம் ஆண்டில் முத்துக்குடாவில் உள்ளூர்ச் சமூகத்தின் ஆதரவுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

❖ மணமேல்குடி தொகுதியில் உள்ள மும்பாலை கடலோரக் கிராமத்தில் 20 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்புநிலத் தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

❖ பசுமை தமிழ்நாடு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, உயிரிக் கட்டமைப்பு சார் கவசங்களை உருவாக்கச் செய்வதன் மூலம் கடலோரப் புனரமைப்பு / மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## இரவு நேரங்களில் இயங்கலை வழி விளையாட்டுகளுக்கு தடை




❖ நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரையிலான நேரத்தில் பணத்தினை வைத்து விளையாடும் விளையாட்டுகளை (RMG) விளையாடுவதற்கு தமிழ்நாடு இயங் கலை வழி விளையாட்டு ஆணையம் (TNOGA) விதித்த ஒரு தடையின் செல்லுபடித் தன்மையினை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

❖ இது RMG விளையாடுவதற்கு கட்டாய ஆதார் சரிபார்ப்பு போன்ற நிபந்தனைகளில் தலையிடவும் மறுத்து விட்டது.


❖ அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் இரண்டாவது (மாநிலப் பட்டியல்) பட்டியலில் 6வது தலைப்பு (பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு) மற்றும் 26வது தலைப்பு (மாநிலத்திற்குள் வர்த்தகம் மற்றும் வணிகம்) ஆகியவற்றைப் பயன்படுத்தி இயங் கலை வழி விளையாட்டுகளை நிர்வகிக்கும் இச்சட்டத்தினை இயற்ற மாநிலச் சட்ட மன்றம் முழு அதிகாரம் கொண்டது என்றும் இந்த அமர்வு கூறியது.

❖ 2025 ஆம் ஆண்டு விதிமுறைகள் ஆனது மிகவும் அதிகரித்து வரும் பொது சுகாதார நெருக்கடிக்கு அவசியமான நடவடிக்கை என்றும், DPSP விதிமுறைகளின் 39 சரத்துடன் ஒன்றிப் போவதாகவும் நீதிமன்றம் முடிவு செய்தது.

❖ இதில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் நியாயமான கட்டுப்பாடுகள் என்றும்,

அரசியலமைப்பின் 19(2) மற்றும் 19(6) சரத்துகளின் கீழ் அவை பாதுகாக்கப்படுகின்றன என்றும் அரசாங்கம் வாதிட்டது.

## உற்பத்தித் துறையின் சாதனைகள்




- தமிழ்நாடு மாநிலம், 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்னெடுப்பானது 2014 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில், உற்பத்தித் துறையின் பங்கை 25% ஆக உயர்த்துவதே அதன் இலக்காக இருந்தது.
- தேசிய சராசரி உயர்வு 16 சதவீதத்தினை மட்டுமே எட்டியுள்ள நிலையில், தமிழ்நாடு ஏற்கனவே அதன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 25 சதவீத இலக்கினை அடைந்துள்ளது.
- இந்தியாவிலேயே மிக அதிக அளவில் உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மற்றும் எண்ணெய் அல்லாத பொருட்களின் ஏற்றுமதியில் மிக முன்னணியில் உள்ள தமிழ்நாட்டில் 31,000க்கும் மேற்பட்ட செயல்படும் தொழிற்சாலைகள் உள்ளன.
- மக்கள் தொகையில் சுமார் 6 சதவீதத்திற்கும் குறைவான பங்கையேக் கொண்டிருந்த போதிலும், இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 15% பங்களிப்பை அளிக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது.
- இந்தியாவின் மின்னணு ஏற்றுமதியில் 41%, காலணிகளில் 38% மற்றும் தானியங்கி இயந்திரங்களின் பாகங்கள் ஏற்றுமதியில் 45% பங்கினைத் தமிழ்நாடு கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது, மின்னணு ஏற்றுமதியை சுமார் 14 பில்லியன் டாலரிலிருந்து, 100 பில்லியன் டாலராக உயர்த்த இலக்குகளை நிர்ணயித்துள்ளது.


# தேசியச் செய்திகள்

## உள்நாட்டு த்ரோம்பெக்டமி சாதனத்திற்கான உதவி

- இந்திய நாடானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் இயந்திர வழி ரத்தக் குழாய் குருதி உறைவு நீக்க (த்ரோம்பெக்டமி) சாதனத் தயாரிப்பினைத் தொடங்க

உள்ளது.

- இதற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம் (TDB) ஆனது நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, மைசூரில் உள்ள S3V வாஸ்குலர் டெக்னாலஜிஸ் (இரத்த நாள அறுவை சிகிச்சை தொழில்நுட்ப நிறுவனத்தினால்) முன்னெடுத்து மேற்கொள்ளப் படுகிறது.
- இது முக்கியமான பக்கவாதப் பராமரிப்பு கருவிகளைத் தயாரிப்பதற்கு தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூர் அருகே ஓர் ஒருங்கிணைந்த உற்பத்தி மையத்தினை நிறுவ உள்ளது.
- த்ரோம்பெக்டமி சாதனம் என்பது இஸ்கிமிக் வகை (இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படும்) பக்கவாதங்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டி இரத்த நாளங்களில் இருந்து, குறிப்பாக மூளையில் உள்ள இரத்தக் கட்டிகளை அகற்றப் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு மருத்துவக் கருவியாகும்.
- 2021 ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் சுமார் 1.25 மில்லியனுக்கும் அதிகமான புதிய பக்கவாதப் பாதிப்புகள் பதிவாகியுள்ளன என்பதோடு 1990 ஆம் ஆண்டில் பதிவான 650,000 பாதிப்புகளுடன் ஒப்பிடும் போது இது 51 சதவீதம் அதிகமாகும்.





## ஏற்றுமதியாளர்களுக்கான RoDTEP திட்டம்

- 2025 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் ஏற்றுமதி செய்யப் பட்ட பொருட்களின் மீதான சுங்க வரிகள் மற்றும் வரிகளை நீக்குதல் (RoDTEP) திட்டத்தினை மத்திய அரசு மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- முன்கூட்டிய அங்கீகாரம், ஏற்றுமதி சார்ந்த அலகுகள் (EOU) மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZ) ஆகியவற்றின் கீழ் செயல்படும் அலகுகளுக்கு இது பயனளிக்கும்.
- வேறு எந்தத் திட்டத்தின் கீழும் தள்ளுபடி செய்யப்படாத சில வரிகள் மற்றும் சுங்க வரிகளைத் திரும்ப அளிப்பதை RoDTEP திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்ற ஒரு நிலையில் இதன் கீழான பலன் விகிதங்கள் 0.3-4.3% வரை இருக்கும்.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியாவானது தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

❖ இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை ஏற்கனவே FTA ஒப்பந்தத்தினை நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளன.




## இந்தியாவின் மின்சார வாகன உற்பத்தி வழிகாட்டுதல்கள் 2025




❖ இந்தியாவானது உலகளாவிய வாகன உற்பத்தி நிறுவனங்களை நமது உள்நாட்டில் மகிழுந்துகளைத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய முதன்மை மின்சார வாகனக் கொள்கையை உருவாக்கி வருகிறது.

❖ இந்த நிறுவனங்கள் ஆனது, தற்போது உள்ள 70 முதல் 100% வரையிலான இறக்குமதி வரியிலிருந்து 15% என்ற குறைந்த இறக்குமதி வரியில் ஆண்டுதோறும் 8,000 மின்சார நான்கு சக்கர வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

❖ ஆனால் இந்த சலுகையைப் பெற, இந்தியாவில் ஒரு விண்ணப்பதாரர் சுமார் 3 ஆண்டு

காலத்தில் 4,150 கோடி ரூபாய் (சுமார் 500 மில்லியன் டாலர்) மதிப்பில் குறைந்தபட்ச முதலீட்டு உறுதிமொழி மேற்கொள்ளப்பட வேண்டும்.

## NAKSHA திறன் மேம்பாட்டுத் திட்டம்

❖ கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆனது, NAKSHA திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டிற்கான இரண்டாம் கட்டத்தை நடத்தியது.

❖ NAKSHA என்பது 'நகர்ப்புற வாழ்விடங்களின் தேசியப் புவியிட தகவல் சார்ந்த நில ஆய்வு' என்பதைக் குறிக்கிறது.


❖ இது எண்ணிம இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் (DILRMP) கீழான ஒரு நகரக் கணக்கெடுப்பு முயற்சியாகும்.

❖ மேம்பட்ட புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நகர்ப்புற நில அளவீடுகளை சீரமைப்பதே NAKSHA திட்டத்தின் நோக்கமாகும்.

❖ இது கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் நில வளத் துறையால் (DoLR) செயல்படுத்தப் படுகிறது.




## சுவச் சர்வேக்சன் கிராமின் 2025




❖ மத்திய ஜல் சக்தி அமைச்சகமானது, சுவச் சர்வேக்சன் கிராமின் (SSG) எனப்படும் 2025 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மிகப்பெரியதான அளவில் அமைந்த சுகாதாரத் தர வரிசை/துப்புரவுக் கணக்கெடுப்பை டெல்லியில் தொடங்கியது.

❖ இந்த நாடு தழுவிய அளவு கிராமப்புற சுகாதாரத் தரவரிசை கணக்கெடுப்பு ஆனது 34

மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள சுமார் 761 மாவட்டங்களில் 21,000 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இது ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் (DDWS) நடத்தப்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச நடுவண் தீர்ப்பாய அமைப்பு (IOMed)


- சீன அரசாங்கமும் பிற 32 நாடுகளும் ஹாங்காங்கில் ஒரு சர்வதேச நடுவண் தீர்ப்பாய அமைப்பை (IOMed) நிறுவுவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது "சர்வதேச தகராறுகளை நடுவண் தீர்ப்பாயம் மூலம் நன்கு தீர்ப்பதற்காக என்று அர்ப்பணிக்கப்பட்ட உலகின் முதல் அரசுகளுக்கிடையேயான சர்வதேசச் சட்டப்பூர்வ அமைப்பு" என்று விவரிக்கப்பட்டது.
- அதன் அந்தஸ்து ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளான சர்வதேச நீதிமன்றம் (ICJ) மற்றும் ஹேக்கில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றத்திற்கு இணையாக இருக்கும்.
- ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 33வது பிரிவு ஆனது, பேச்சுவார்த்தை, விசாரணை, நடுவம், சமாதானம், சமரசம், நீதித்துறைசார் தீர்வு அல்லது இதர பிற அமைதியான வழிமுறைகள் மூலம் பல்வேறு சர்வதேசத் தகராறுகளை மிக அமைதியான முறையில் தீர்க்க வழங்குகிறது.
- இது வரையில் தகராறுகள் தீர்வுக்கான நடுவண்/மத்தியஸ்த முறைக்கு நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான அமைப்பு எதுவும் இல்லை.




## ஜப்பான் கார்பன் உமிழ்வு வர்த்தக அமைப்பு

- ஜப்பான் நாட்டின் பாராளுமன்றம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் கார்பன் உமிழ்வு வர்த்தக திட்டத்தில் சேர கடமைப் படுத்தும் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.
- திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ், ஆண்டிற்கு 100,000 டன் கார்பன் டை ஆக்சைடு அல்லது அதற்கு மேல் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இந்தப் பசுமை மாற்ற உமிழ்வு வர்த்தக அமைப்பில் சேர வேண்டும்.

- உள்நாட்டுப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் நிறுவனங்கள் சுமார் 60% என்ற அளவிற்குப் பங்ககளிப்பதாக அரசாங்கம் மதிப்பிடுகிறது.
- வர்த்தக அமைப்பின் கீழ், நிறுவனங்களுக்கு மிகவும் அதிகபட்ச உமிழ்வு ஒதுக்கீடு வழங்கப் படும்.
- அந்த நிறுவனங்கள் வரம்பிற்கு மேல் உள்ள எந்தவொரு உமிழ்விற்கும் சந்தையில் கார்பன் வரவுகளை வாங்க வேண்டும்.




## பனிப் பாறைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு 2025




- பனிப் பாறைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாட்டின் ஒரு முழுமையான அமர்வு ஆனது தஜிகிஸ்தான் குடியரசின் துஷான்பே எனுமிடத்தில் நடைபெற்றது.
- பனிப் பாறைகள் மற்றும் அவற்றின் சமூக-பொருளாதார நன்மைகளைப் பாதுகாக்க பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்தியது.
- "சர்வதேச பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டு 2025" மற்றும் "தாழ் வெப்ப மண்டல

/கிரையோஸ்பியர் அறிவியலுக்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கான தசாப்தம், 2025–2034" குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதை இந்த மாநாடு ஆதரித்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## மூன்று DPSU நிறுவனங்களுக்கு மினிரத்னா அந்தஸ்து

- பாதுகாப்பு அமைச்சகமானது கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு முதலாம் வகை 'மினி ரத்னா' அந்தஸ்து வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
    - இந்திய வெடிமருந்துகள் உற்பத்திக் கழக லிமிடெட் நிறுவனம் (MIL),
    - ஆயுதமேந்திய வாகனங்கள் உற்பத்திக் கழக நிகாம் லிமிடெட் (AVNL), மற்றும்
    - இந்தியா ஆப்டெல் லிமிடெட் (IOL)
- மினிரத்னா திட்டம் ஆனது 1997 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மினிரத்னா அந்தஸ்து பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு
    - கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக லாபத்தை அடைந்திருக்க வேண்டும்.
    - இந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஓராண்டிலாவது 30 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பிலான வரிக்கு முந்தைய இலாபத்தை எட்டி இருக்க வேண்டும்.
    - நேர்மறை நிகர மதிப்பைப் பேண வேண்டும்.





## இந்திய ரிசர்வ் வங்கியின் 6வது பண வரவுக் கணக்கெடுப்பு

- 2023-24 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் பணத்தின் பங்கு 118.7 பில்லியன் டாலரை எட்டி புதிய சாதனை படைத்துள்ளது.
- இது அந்நிய நேரடி முதலீட்டு வரவினை விட அதிகமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், இந்தியாவின் வணிகப் பற்றாக்குறையில் பாதிக்கும் மேலான அளவில் பங்கினையும் வழங்குகிறது.
- அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் பண வரவின் பங்கு 27.7% ஆகும்.
- இது ஐந்தாவது சுற்றுக் (2020-21) கணக்கெடுப்பில் பதிவான 23.4 சதவீதத்திலிருந்து

அதிகரிப்பினைக் குறிக்கிறது.

- பண வரவில் அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகியவை ஒருசேர 51.2% பங்கினைக் கொண்டுள்ளன.
- அவை ஆறு GCC நாடுகளின் (37.9%) ஒட்டுமொத்தப் பங்கை ஒரு பெரிய வித்தியாசத்தில் முந்தியுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில், 5 லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட மதிப்பிலான பரிமாற்றங்கள் மொத்தப் பண வரவு மதிப்பில் சுமார் 29% பங்கினைக் கொண்டுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில், எண்ணிம பணவரவு முறைகளில் இருந்து பெறப்பட்ட வரவுகள் சராசரியாக, அனைத்துப் பண வரவுப் பரிவர்த்தனைகளிலும் 73.5% பங்கைக் கொண்டு இருந்தன.
- தற்போது இந்தியாவிற்கு 200 டாலர் அனுப்புவதற்கான சராசரிச் செலவினம் 4.9% ஆக உள்ளது என்பதோடு இது உலக சராசரியான 6.65 சதவீதத்தினை விடக் குறைவாகும்.
- ஆனால் இது இன்னும் நிலையான மேம்பாட்டு இலக்கு அளவுருவான 3 சதவீதத்தினை விட அதிகமாக உள்ளது.
- மகாராஷ்டிரா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மொத்தப் பண வரவு மதிப்பில் சுமார் 51% பங்கினைப் பெற்றுள்ளன.
- பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை மொத்தப் பண வரவு மதிப்பில் 6 சதவீதத்திற்கும் குறைவான பங்கைப் பெற்றுள்ளன.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## mNexspike தடுப்பூசி

- மாடர்னா என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட mNexspike என்ற புதிய கோவிட்-19 தடுப்பூசியை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.
- இந்தப் புதிய தடுப்பூசி என்பது அடுத்தத் தலைமுறையிலான தொழில்நுட்பத்திலான கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை நோக்கிய ஒரு படியாகும்.
- இது அதன் தற்போதைய கோவிட்-19 தடுப்பூசியின் தவணையில் ஐந்தில் ஒரு பங்கைக் குறைக்க வழிவகுக்கிறது.
- இது குறிப்பாக 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 12 முதல் 64 வயது

உடையவர்களை இலக்காகக் கொண்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## கலோடஸ் சோலைக்கிங் - மேகாலயாவில் முதல் முறையாக பதிவு


- கலோடஸ் சோலைக்கிங் (*Calotes zolaiking*) எனும் தோட்டப் பல்லி இனமானது 2019 ஆம் ஆண்டில் முதன்முதலில் மிசோரமின் ஐஸ்வால் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது.
- இந்த பல்லி இனமானது தற்போது மேகாலயாவின் கிழக்கு காசி மலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 14 வகையான கலோடஸ்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் ஒன்பது இனங்கள் வடகிழக்கு மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.




## கேரளாவில் சிறு நெகிழித் துகள்கள்

- MSC ELSA3 என்ற கொள்கலன் கப்பல் மூழ்கியதைத் தொடர்ந்து கேரளாவின் திருவனந்த புரத்தில் உள்ள கடற்கரைகளில் சிறிய நெகிழித் துகள்கள் காணப்படுகின்றன.
- முதன்மையான சிறு நெகிழித் துகள்கள் என வகைப்படுத்தப்பட்ட இந்தத் துகள்கள் ஆனது 1 மில்லி மீட்டர் முதல் 5 மில்லி மீட்டர் வரையிலான விட்டம் கொண்டவை.
- கொச்சு வேலியில் காணப்படும் துகள்கள் பெரும்பாலும் குறைந்த அடர்த்தி கொண்ட பாலிஎத்திலீன் (LDPE) மற்றும் அதிக அடர்த்தி கொண்ட பாலிஎத்திலீன் (HDPE) ஆகும்.

- இந்தத் துகள்கள் உருக்கப்பட்டு பொட்டலங்கள், தண்ணீர் குடுவைகள், பொம்மைகள் மற்றும் ஜவுளி உள்ளிட்ட பல்வேறு பொருட்களாக வடிவமைக்கப்படுகின்றன.
- இவை மிக இயல்பாகவே நச்சுத் தன்மையற்றதாக இருந்தாலும், இந்தத் துகள்கள் ஒரு ஆபத்தான மாசுபடுத்தியாகவே உள்ளன.
- அவை சிறு மற்றும் குறு நெகிழித் துகள்களாக உடைந்து உணவுச் சங்கிலியில் நன்கு நுழையும்.
- ஒரு கப்பல் விபத்து காரணமாக இந்தியாவில் சிறு நெகிழித் துகள்கள் கரை ஒதுங்கும் முதல் பெரிய சம்பவம் இதுவாகும்.




## 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் வன இழப்பு





- 2024 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 18,200 ஹெக்டேர் பரப்பிலான பிரதானக் காடுகளை இழந்துள்ளதோடு இது 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சுமார் 17,700 ஹெக்டேர் என்ற அளவில்ருந்து சற்று அதிகமாகும்.
- 2002 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஒரு காலத்தில், நாடு முழுவதும்

மொத்தமாக சுமார் 3,48,000 ஹெக்டேர் பரப்பிலான ஈரப்பதமிக்க பிரதானக் காடுகள் இழக்கப் பட்டுள்ளன.

- இது இந்தியாவின் மொத்த ஈரப்பதம் மிக்க பகுதிகளின் பிரதானக் காடுகளில் சுமார் 5.4% ஆகும்.
- இது அதே காலக் கட்டத்தில் பதிவான நாட்டின் மொத்த மரப்பரப்பு இழப்பில் சுமார் 15% ஆகும்.
- 2001 ஆம் ஆண்டிலிருந்து, இந்தியா தோராயமாக 2.31 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் அமைந்த மரப் பரவலை இழந்துள்ளது என்பதோடு இது 7.1% சரிவைப் பிரதிபலிக்கிறது.
- இந்த இழப்பு ஆனது சுமார் 1.29 ஜிகா டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வை உருவாக்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- அசாம் மாநிலத்தில், 2001 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், 3,40,000 ஹெக்டேர் பரப்பிலான மரப் பரவல் இழப்பு பதிவாகியுள்ளது.
- 2001 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் காட்டுத்தீ காரணமாக 8,330 ஹெக்டேர் பரப்பிலான மரப் பரவல் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- தீ விபத்து காரணமாக மிக அதிக அளவிலான வன இழப்பு ஏற்பட்ட ஆண்டு 2008 ஆம் ஆண்டாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## WMO உலகளாவியப் பருவநிலை முன்னறிவிப்பு 2025–2029





- உலக வானிலை அமைப்பு (WMO) 2025-2029 ஆம் ஆண்டுகளுக்கான உலகளாவிய வருடாந்திர முதல் தசாப்தப் பருவநிலைத் தகவல் புதுப்பிப்பு என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2025 மற்றும் 2029 ஆகிய ஆண்டுகளுக்கு இடைபட்ட காலத்தில், மிகவும் குறைந்தது ஓராண்டாவது, பதிவான வெப்பமான ஆண்டை (தற்போது உள்ள 2024 ஆம் ஆண்டு) விட அதிக வெப்பமான ஆண்டாக மாற 80% வாய்ப்பு உள்ளது.
- வெப்பநிலையானது தொழில்துறைக்கு முந்தைய காலத்தில் பதிவான சராசரியை விட 1.2°C முதல் 1.9°C வரை அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த முன்னறிவிப்பானது, ஐந்து ஆண்டு சராசரி வெப்பமயமாதல் ஆனது 1.5°C வெப்ப நிலையை விட மிக அதிகமாக இருப்பதற்கான வாய்ப்பு என்பது 70% இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

- 2023 ஆம் ஆண்டு முதல், தெற்காசியப் பகுதி அசாதாரணமாக ஈரப்பதத்துடன் உள்ளது என்ற ஒரு நிலைமையில் இது மேலும் 2025-2029 ஆகிய ஆண்டுகளுக்கு இடைபட்ட காலக் கட்டத்திலும் தொடரும்.

## பேரிடர் அபாயக் குறைப்பு அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையை (GAR) ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகமானது (UNDRR) வெளியிட்டுள்ளது.
- 1970 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஒரு காலத்தில், பேரிடர்களினால் ஏற்பட்ட நேரடிச் செலவினங்கள் ஆண்டிற்குச் சராசரியாக 70–80 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தன.
- 2001 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஒரு காலத்தில், வருடாந்திரச் செலவினங்கள் 180–200 பில்லியன் அமெரிக்க டாலர்களாக கணிசமாக அதிகரித்தன.
- 2025 ஆம் ஆண்டில், மறைமுக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளுடன் சேர்க்கப்படும் போது மொத்தப் பேரிடர் செலவினங்கள் தற்போது ஆண்டுதோறும் 2.3 டிரில்லியன் டாலரைத் தாண்டிவிட்டன.
- நகரங்களில் சுமார் 1.2 பில்லியன் குடியிருப்பாளர்கள் புதிதாக இணைவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்பதோடு மேலும் அவர்களில் 98.4 சதவீதம் பேர் உலகின் தெற்கு நாடுகளில் வசிப்பார்கள்.
- வெள்ளத்தினால் ஏற்படும் இழப்புகள் 5 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை அதிகரிக்கும்.
- 2050 ஆம் ஆண்டிற்குள் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமான நிலமானது தரமிழக்கும் அபாயத்தில் உள்ளதோடு இது தற்போது 40 சதவீதமாக உள்ளது.
- கடந்த 30 ஆண்டுகளில் பேரிடர் நிகழ்வுகள் காரணமாக பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்தியில் 3.8 டிரில்லியன் டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது ஆண்டிற்குச் சராசரியாக சுமார் 123 பில்லியன் டாலர்கள் அல்லது உலகளாவிய வேளாண் சார் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% இழப்பிற்குச் சமமாகும்.

Figure 1. Disaster-related mortality worldwide, 2005–2023





# மாநிலச் செய்திகள்

## பைராபி–சாய்ராங் பாதை

- மிசோரமின் தலைநகரான ஐஸ்வால், தற்போது பைராபி–சாய்ராங் பாதை வழியாக தேசிய இரயில்வே வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
- மிசோரம் மாநிலத் தலைநகரமானது தற்போது தேசிய இரயில்வே வலையமைப்புடன்


இணைக்கப்பட்ட நான்காவது வடகிழக்கு மாநிலமாக மாறியுள்ளது.

❖ மற்ற மூன்று மாநிலங்கள் அசாம், திரிபுரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகும்.




## இதரச் செய்திகள்

### விரிவான மாதிரிக் கணக்கெடுப்பின் முடிவுகள் - தொலைத்தொடர்பு 2025




❖ கிராமப்புறங்களில், 15 முதல் 29 வயதிற்குட்பட்டவர்களில், தோராயமாக 96.8 சதவீதம் பேர் கடந்த மூன்று மாதங்களில் குறைந்தது ஒரு முறையாவது அலைபேசிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

❖ கிராமப்புறங்களில் 15 முதல் 29 வயதிற்குட்பட்டவர்களில், சுமார் 95.5 சதவீதம் பேர் திறன்பேசிகளை வைத்திருக்கிறார்கள்.

❖ நகர்ப்புறங்களில், அதே வயதுடையவர்களில் சுமார் 97.6 சதவீதம் பேர் திறன்பேசி உபகரணங்களை வைத்திருக்கிறார்கள்.

❖ இந்தியாவில், தோராயமாக 85.5 சதவீத வீடுகளில் குறைந்தது ஒரு திறன்பேசி உள்ளது.

❖ இந்தியாவில் சுமார் 86.3 சதவீத வீடுகளில், வீட்டு வளாகத்திற்குள் இணைய அணுகல் உள்ளது.

❖ கிராமப்புறங்களில் 15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களில், 51.4 சதவீதப் பெண்கள்

இணைய வழி வங்கி பரிவர்த்தனைகளைச் செய்யும் திறனைப் பெற்றுள்ளனர்.

- இது 2022-23 ஆம் ஆண்டில் 19.6 சதவீதமாக இருந்ததை விட இரண்டு மடங்கு அதிகரித்து உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★